This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# தோரணத்து மாவிலைகள்

www.writersujatha.com

## 1

என்னைப் பலர் கேட்கிறார்கள். 'இத்தனை நாட்களாக மாய்ந்து மாய்ந்து எழுதுகிறாய். அதற்கு எதாவது சாகித்திய அகாதமி பரிசு, ராஜராஜன் விருது, எதாவது அறக்கொடை, ஏன் சின்னதாக நோபல் பரிசு அல்லது நாகாலண்டு, ராஜலக்ஷ்மி... எந்தப் பரிசும் கிடைக்கவில்லையா' என்று. பத்திரிகைகளில் கேள்வி – பதில் எழுத, அவ்வப்போது சம்மதித்தபோதெல்லாம் முதல் கேள்வியும் இஃதே.

இப்படிக் கேட்பவர்களின் நோக்கம், நான் பெரிசாகப் பரிசு பெறணும் என்கிற விருப்பமில்லை. சும்மா உசுப்பி விடலாமே, பரிசு வாங்கினவர்களைத் திட்டுகிறானா பார்க்கலாமே என்பதுதான். சுமார் முப்பது வருஷம் எழுத்தாளனாக இருப்பதால் இந்த மாதிரி உள் நோக்கங்கள் எல்லாம், பாசாங்குகள் எல்லாம், புன்னகையாலும் முகஸ்துதியாலும் மழுப்பப்படும் துரோகங்கள் எல்லாம் சுலபமாகப் புரிந்து விடுகின்றன. இதைப் பற்றி எழுத்தாளன் பார்வை என்கிறது வரும்போது, பின்னால் சொல்கிறேன்.

எனக்குப் பரிசு ஏன் கிடைக்கவில்லை என்று கேட்பவர்களுக்கெல்லாம் மாறாமல் ஒரே பதில் சொல்லி வந்தேன்– "நான் பரிசுகளைத் தேடிப் போகவில்லை" என்று. இப்போது, "பரிசா? கிடைத்திருக்கிறதே, அக்னி அமைப்பாளர்கள் தெரியாத்தனமாக ஒரு பரிசு கொடுத்திருக்கிறார்களே" என்று பதிலை மாற்றிக் கொள்ள வாய்ப்புக் கொடுத்த 'அக்னி'க்கு நன்றி சொல்லவில்லை என்றால், ரயில் சார்ஜ் கொடுக்க மாட்டார்கள். எனவே முதற்கண் நன்றி.

நான் பிறந்தது 1935ல் நான் எழுத ஆரம்பித்தது 1940ல், கோவையில் ஆர்.எஸ்.புரத்தில் ஓர் ஆரம்பப் பள்ளியில். என்ன எழுதினேன் என்று யோசித்துப் பார்த்ததில் அவ்வளவு ஒன்றும் இலக்கியத்தரமாக இருந்ததாக நினைவில்லை. அணில், ஆடு, படம், பட்டம் என்று எழுதி வந்தேன். இந்தக் குறுகிய ஒக்கபிலேரி, பிற்காலத்தில் என் எழுத்தை எத்தனை பாதித்தது என்ற தெரியவில்லை. ஆனால் எழுதச் சொன்ன டீச்சரை ஞாபகம் இருக்கிறது. அந்த மாது என்னை வீட்டிலிருந்து ஆனந்தவிகடனும் அம்ருதாஞ்சனமும் கொண்டு வரச் சொல்ல, அப்போதே வெகுஜன தமிழ்ப் பத்திரிகை உலகத்துடன் முதல் பரிச்சயம், அதனால் உண்டானது. ஆனந்த விகடனை 'ஹிந்து' போன்ற மற்ற பத்திரிகைகளிலிருந்து அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது. டீச்சருக்குக் கொடுப்பதற்காக, நான் படிப்பதற்காக அல்ல...

அந்த நாட்களில் குதிரை வண்டியில் 'ஜகதலப்பிரதாபன்' சென்றதும் பள்ளியில் தாகூர் இறந்து போனதற்கு லீவு விட்டதும் ஞாபகம் இருக்கிறது. மரத்தடியில் சன்னலுக்கு வெளியே தோசைக் கல் மாதிரி ஒரு மணி தொங்கும். அதை அடித்துப் பார்க்க வேண்டும் என்கிற ஆசை வந்து, ஒருமுறை அகாலமாக ஸ்கூல் மணியை அடித்துவிட்டு, அதற்கான தண்டனையும் பெற்றிருக்கிறேன்.

அப்போதே என் எழுத்துலக ஆசைகள் வித்திடப்பட்டிருக்க வேண்டும். மற்ற பேர் மணியை அடிக்கும் உத்தேசம், மெல்ல மெல்ல மற்றவர் கதையைச் சொல்லும் விருப்பமாக மாறியிருக்கலாம்.